

சைதை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கு.அஜித்குமார் – சிந்து (எ) பவித்ரா திருமணத்தை சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். மணவிழாவிற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஜிம் பிரபு, தலைமை வகித்தார். சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டல குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார். இதில் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா உள்ளிட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.



தமிழ்த்திரையுலகின் முன்னணி இயக்குநராக திகழ்ந்து மறைந்த இயக்குனர், தயாரிப்பாளர், நடிகர் கே.பாக்யராஜ் அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவப் படத்திற்கு கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி அவரது மகன் சாந்தனுவுக்கு ஆறுதல் கூறினார். உடன் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் நகர துணை செயலாளர் வி. கமலக்கண்ணன் உள்ளனர்.

### மதுரவாயலில் இன்று நடைபெறுகிறது!

# பேராசிரியர் சு.கிருஷ்ணசாமி இல்ல மணவிழா வரவேற்பு!

## கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

கோவை, ஜூலை 4 -

தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்ற முன்னாள் உறுப்பினர் செயலர் பேராசிரியர் முனைவர் சு. கிருஷ்ணசாமி - தமிழ்நாடு சுகாதாரத்துறை இளநிலை நிர்வாக அதிகாரி (ஓய்வு) க. புவனேஸ்வரி ஆகியோரின் புதல்வர் கே. பரத் சூர்யா - கே.மனோசித்ரா ஆகியோரின் திருமணம் 2.7.2026 வியாழக்கிழமை அன்று காலை 7.30 மணியளவில் கோயம்புத்தூர் தெலுங்கு பாளையம் ஸ்ரீ வாசவி மிரா மகாலில் நடைபெற்றது.

மணவிழா வரவேற்பு இன்று (4.7.2026 - சனிக்கிழமை) மாலை 6.30 மணியளவில் மதுரவாயல் எஸ்.பி.பி. கார்டன்ஸில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு கழகப் பொருளாளர் - முன் னாள் ஒன்றிய அமைச்சர் டி.ஆர். பாலு எம்.பி. தலைமையில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., கலைஞானி கமல்ஹாசன் எம்.பி. கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி, மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி என்.சிவா, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., டாக்டர் எச்.வி. ஹண்டே, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, முன்னாள் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்ரமணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., ஆவடி சா.மு. நாசர், டி.ஆர்.பி. ராஜா, முனைவர் கோவி. செழியன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன், என்.ஆர். இளங்கோ, தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., நல்லி குப்புசாமி, நீதிபதி (ஓய்வு) டி.முருகேசன், மாதவரம் எஸ்.சுதர்சனம், காரம்பாக்கம் க.கணபதி, நொளம்பூர் ராஜன், டீக்கா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### தென்மேற்கு பருவமழை தீவிரம் !

# வடமாநிலங்களில் கொட்டித் தீர்க்கும் கனமழை!

மும்பை, ஜூலை 4-

நாட்டின் வட மாநிலங்கள் மற்றும் வட மேற்குப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தீவிர மடைந்துள்ளது. கடந்த ஜூன் மாத முதல் பாதியில் நிலவிய மழை பற்றாக்குறையைத் தொடர்ந்து, ஜூன் 29 முதல் பருவமழை தீவிர மடைந்து உள்ளது.

தற்போது தலைநகர் டெல்லி, மும்பை உள்ளிட்ட பல வட இந்தியப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தீவிரமாக உள்ளதோடு, அடுத்த சில நாட்களுக்குக் கனமழை நீடிக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) அறி வித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக பல வட மாநிலங்களில் கனமழை கொட்டி தீர்க்கிறது. மும்பையில் பலத்த காற்றுடன் பெய்த கன மழையால் முக்கிய சாலை கள் குளம் போல் மாறின.

டெல்லி, மகாராஷ்டிரா, கோவா, கொங்கன், தெற்கு குஜராத் மற்றும் மத்திய இந்தியாவின் சில பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு மிக கனமழை தொடரும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இதனிடையே தென்மேற்கு பருவமழை இமாச்சல பிரதேசத்தில் ஜூலை 1ஆம் தேதி முதல் தொடங்கி இருக்கிறது.

இந்த பருவமழை வழக்கமாக ஜூன் 25ல் அங்கு தொடங்கும், ஆனால் நடப்பாண்டில் சுமார் ஆறு நாட்கள் தாமதமாக துவங்கியுள்ளது. மேலும் உத்தர கண்ட், ஜம்முகாஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய பகுதிகள் முழுவதையும் பருவமழை சூழ்ந்துள்ளது.

தலைநகர் டெல்லியை பொறுத்த வரை பருவமழை காரணமாக இடி, மின்னலுடன் கூடிய பரவலான கனமழை பெய்து வருகிறது.

அதே நேரம் பருவமழையின் அடுத்தகட்ட நகர்வாக ராஜஸ்தானின் பல பகுதிகளில் மழைப் பொழிவு அதிகரித்துள்ளது.

### இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு !

# பெட்ரோல் - டீசல் விலை குறைக்க வாய்ப்பு இல்லை!

## ஒன்றிய அமைச்சர் அறிவிப்பால் பரபரப்பு!

புதுடெல்லி, ஜூலை 4

மேற்காசிய போர் நெருக்கடி காரணமாக இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதால் பெட்ரோல், டீசல் விலை குறைய 2 அல்லது 3 மாதங்கள் ஆகலாம் என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. டெல்லியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த ஒன்றிய பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறியதாவது: சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தாலும், மேற்காசிய போரின்போது வாங்கப்பட்ட எரிபொருளை இந்திய நிறுவனங்கள் அதிக விலை கொடுத்தே சுத்திகரித்து வருகின்றன.

எரிபொருள் உற்பத்திக்கான மூலப்பொருளான கச்சா எண்ணெய்யை எண்ணெய் நிறுவனங்கள் வழக்கமாக குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்பே கொள்முதல் செய்கின்றன.

எனவே, தற்போது சுத்திகரிக்கப்படும் கச்சா எண்ணெய் என்பது, சர்வதேச விலை மிக அதிகமாக இருந்த ஏப்ரல் அல்லது மே மாத தொடக்கத்தில் வாங்கப்பட்டது. ஜூன் 30ம் தேதி வரை அடக்க விலையை விட குறைவான விலையில் பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி ஆகியவை விற்பனை செய்யப்பட்டதால் எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச கச்சா எண்ணெய் விலைகள் குறைந்துள்ளன. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்பு (அப்போதைய விலையில்) வாங்கிய கச்சா எண்ணெய் இருப்பையே நாங்கள் இன்று பயன்படுத்துகிறோம். இந்த விலை சரிவு 23 மாதங்களுக்குத் தொடர்ந்தால், அப்போது பார்க்கலாம். ஆனால் இது ஒரு அனுமான நிலை மட்டுமே. வளர்ச்சியடைந்த நாடுகளில் பெட்ரோல் விலை உயர்வு சுமார் 20 சதவீதமாகவும், இந்தியாவின் அண்டை நாடுகளில் சுமார் 35 சதவீதமாகவும் இருந்த நிலையில், நெருக்கடியின் போது இந்தியாவில் பெட்ரோல் விலை உயர்வு வெறும் 5.58 சதவீதமாக மட்டுமே இருந்தது.

கடந்த நான்கு மாதங்களில் நெருக்கடியான காலகட்டத்தில் பெட்ரோல் விலையை லிட்டருக்கு 5 ரூபாய் வரை உயர்த்தியிருந்ததால்தான், நயாரா நிறுவனம் இப்போது விலையைக் குறைத்துள்ளது.

அவர்கள் அந்த விலை உயர்வைத்தான் இப்போது திரும்பப் பெற்றுள்ளனர்; அதாவது, அந்த விலையை மட்டுமே குறைத்துள்ளனர். அதே வேளையில், அரசுக்குச் சொந்தமான எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் அந்த நேரத்தில் விலையை உயர்த்தியிருக்கவில்லை. இவ்வாறு தெரிவித்தார்.



கோவை வடக்கு மாவட்டம், கோவை புதூர் பகுதி, வார்டு எண் 91 சுகுணாபுரம் மேற்கு, கல்கி கார்டனில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பொது விநியோக கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி திறந்து வைத்தார். இதில் பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, சிவசக்தி, மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மாற்றுத் திறனாளிகளுக்கு அப்பட்டமான ஏமாற்றம்!

# மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வை முறையாக நடத்துக!

## பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை, 4-

மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வை முறையாக நடத்தவும் என்று தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கலந்தாய்வு, விதிமுறைகளுக்குப் புறம்பாக நேற்று முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாற்றுத்திறனாளி அரசு ஊழியர்களுக்கான பதவி உயர்வு அரசாணை எண் 6ன் பிரகாரம், மாற்றுத்திறனாளிகளுக்கான பொதுப் பட்டியல் (General) தனியாகவும், 4 சதவீத உள்ஒதுக்கீட்டுப் பட்டியல் (Quota) தனியாகவும் பிரிக்கப்பட்டு, காலிப்பணியிடங்கள் காட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கடந்த 29/06/2026 அன்று வெளியிட்ட முன்னுரிமைப் பட்டியலில், பொதுப் பட்டியலில் வர வேண்டியவர்களை உள்ஒதுக்கீட்டுப் கோட்டாவில் கணக்கு காட்டியுள்ளனர். இதனால் கோட்டாவின் கீழ் வரக்கூடிய தகுதியான மாற்றுத்திறனாளிகள் பயனடையாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மொத்தம் பதவி உயர்வு வழங்கப்படும் 439 பணியிடங்களில், மாற்றுத்திறனாளிகளுக்கு 17 இடங்கள் வழங்கப்பட வேண்டும். இதில் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுப் பிரிவுக்குச் சென்றது போக, மீதமுள்ள 13 இடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பதவி உயர்வுக்கான கோட்டாவில் காட்டப்பட்டுள்ளன. இந்த 13 இடங்களில், 6 இடங்கள் மாற்றுத்திறனாளிகளின் பணிமூப்பு அடிப்படையில் பொதுப் பட்டியலிலேயே (General) சென்றிருக்க வேண்டியவை ஆகும். அதனை உள் ஒதுக்கீட்டுப் கோட்டாவில் கணக்கு காட்டியுள்ளதால், கோட்டாவின் கீழ் வர வேண்டிய மாற்றுத்திறனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அப்பட்டமான விதிமீறல் குறித்து, மாற்றுத்திறனாளி ஆசிரியர்கள் சங்கத்தின் மாநில இணைச் செயலாளர்கள், நேற்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறைச் செயலாளர் திருமதி. மதுமதி மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. லட்சுமி ஆகியோரை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அப்போது, ஆணையர் லட்சுமி பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, "கலந்தாய்வை நிறுத்திவிட்டு, கோப்புகளை நேற்று (03/07/2026) மாநில ஆணையத்திற்கு எடுத்து வாருங்கள்" என்று அறிவுறுத்தினார். அதற்கு இயக்குநரும் ஒப்புதல் தெரிவித்தார். ஆனால், சொன்னபடி கலந்தாய்வை நிறுத்தாமல், நேற்று காலை 8:30 மணி முதல் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு மேல் 'இறுதி பட்டியல்' (Final List) வெளியிடப்பட்டது. அதில் 2 மற்றும் 3ஆம் பக்கங்களில் மாற்றுத்திறனாளிகளைப் பரிசீலனை செய்து, சுழற்சி முறையில் பொதுப் பட்டியலையும் கோட்டாவையும் பிரித்துக் காட்டியிருப்பதாகத் தலைப்பை (Title) மட்டும் மாற்றியுள்ளனர். ஆனால், உள்விவரப் பட்டியலில் பொதுப் பிரிவில் இருக்க வேண்டியவர்களை மீண்டும் கோட்டாவிலேயேதான் வைத்துள்ளனர். கடந்த 29/06/2026 அன்று வெளியான பட்டியலில் இருந்த தவறுகளை எதையுமே திருத்தாமல், வெறும் தலைப்பை மட்டும் மாற்றி மாற்றுத்திறனாளிகளுக்குப் பாதகமான அப்பட்டமான ஏமாற்றத்தைச் செய்திருக்கிறார்கள்.

இந்த மாற்றுத்திறனாளிகள் அமைச்சகம் முதலமைச்சர் அவர்களின் பொறுப்பில் இருந்தும், இந்த விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் இருப்பது மாற்றுத்திறனாளிகளைத் தமிழ்நாட்டில் அனாதையாகவிட்டுவிட்டாரோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

இதற்கு முன்பு, மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்காக எண்ணற்ற ஏராளமான நலத்திட்டங்களைச் செய்திருக்கிறார். அவரது காலகட்டத்தில் பதவி உயர்வுகளில் இது போன்ற பிரச்சனைகள் ஒருபோதும் எழுந்ததில்லை.

இவைகளை கணக்கில் எடுத்துக் கொண்டு மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் வகுத்திருக்கின்ற முறைப்படியும் இந்திய பார்வையற்றோர் இணையம் எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான பதவி உயர்வு தீர்ப்பை, முறையாக பள்ளிக்கல்வித்துறை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று திமுக மாற்றுத்திறனாளிகள் அணியின் சார்பாக வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கிருஷ்ணன்

### ஜூலை 4 (2022)



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.**

**மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**